Registered as a Newspaper

பக்கங்கள் : நான்கு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 12 வெள்ளிக்கிழமை (26.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 62

## ஆட்கள் காணாமற் போகின்ற சிக்கலுக்கு பயங்கரவாதத் தடுப்பு விதிகளே காரணம்

### சர்வதேச ஜூரிகள் ஆணைக்குழு இலங்கை அரசுக்குத் தெரிவிப்பு

கொழும்பு, ஜனவரி 26

இலங்கையில் ஆட்கள் பலவந்தமாகக் காணாமல் போகச் செய்யப்படுகின்ற சிக்கலுக்கு பயங்கரவாதத் தடுப்பு ஒழுங்கு விதிகள் என்ற பெயரில் இலங்கை அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்ட ஏற்பாடுகளே பிரதான காரணம்.

- இவ்வாறு ஜெனிவாவை மையமாகக் கொண்டியங்கும் சர்வதேச ஜூரர்களின் ஆணைக்குழு (International Commission Of Jurists) தெரிவித்திருக்கின்றது.

ஆகவே, இந்த சட்ட விதிகளை இலங்கை அரசு மீளாய்வு செய்ய வேண்டிய அவசரமும், அவசியமும் எழுந்திருப்பதாகவும் அந்த அமைப்புத் தெரிவித்திருக்கின்றது.

வலோற்காரமாக ஆட்கள் காணாமற்போகச் செய்யும் கொடூரத்திலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கு உறுதியளிக்கும் - 2006 டிசம்பர் 20ஆம் திகதி ஐ.நாவினால் அங்கீகரிக்கப்பட்ட - பட்டயத்தில் (சர்வதேச சாசனத்தில்) ஒப்பமிட்டு, அந்த சாசனப் படி முழு அளவில் செயற்படுவதற்கும், அந்தப் பட்டயத்தை முற்றாக நடைமுறைப்படுத்துவதற்கும் இணங்குமாறும் -

இவ்வாறு ஆட்கள் பலவந்தமாகக் காணாமற் போகச் செய்யும் சிக்கலுக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## பூஸா முகாமிலிருந்து 33 பேர் விடுவிப்பு

கொழும்பு, ஜன. 26

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பூஸா தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 33 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மலையக மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத்தொழில், தொழில் நுட்பப்பயிற்சிபிரதிஅமைச்சருமான பெ.இராதாகிருஷ்ணனின் முயற்சியால் இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## தெஹிவளையில் தேடுதல் 11 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஜன. 26

தெஹிவளையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்று அதிகாலைவரை பொலிஸார் பெரும் சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றை நடத்தியுள்ளனர். இந்தத் தேடுதலில் 11

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் கடற்படை முகாம் மீது தாக்குதல்

கொழும்பு, ஜன.26

மன்னார் தென்பகுதி தாழ்வுப்பாடு கரையோரத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்து மன்னார் இராணுவ வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றார் என பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மல்வத்தை பீடாதிபதியை ஜனாதிபதி சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஜன.26

அனைவரும் ஒன்றிணைவதன் மூலமே நாட்டை அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்லமுடியும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலைகண்டிதலதா மாளிகையில் மல்வத்தை மகாநாயக்க தேரரை சந்தித்து உரையாடியபோது ஜனாதிபதி இவ்வாறு

(04 ஆம் பக்கம் பார்க்க)

## நிர்ணயித்த விலைகளில் பொருள்களை விற்காதோர் மீது சட்ட நடவடிக்கை

### யாழ்.நீதிவான் நேற்று உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜன.26

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள தனியார் வர்த்தகர்கள், அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு கூடுதலாக விற்றால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட நீதிவான் இ.த.விக்னராஜாசம்பந்தப்பட்டதரப்புகளுக்கு நேற்று உத்தரவிட்டார்.

தனியார் வர்த்தகர்கள், விற்பனை செய்யும் பொருள்களின் விலைகளை தமது நிலையத்துக்கு முன்பாக எல்லோருக்கும் தெரியக்கூடியதாக விளம்பரப்படுத்த வேண்டும் என்றும் -

விற்பனை செய்யும் பொருள்களுக்கு பற்றுச்சீட்டு வழங்க வேண்டும் என்றும் - அவர் தமது உத்தரவில் தெரிவித்துள்ளார்.

நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கை யில் ஈடுபட்டிருக்கும் தனியார் வர்த்தகர் ஒருவர் வியாபார வரி கட்டவில்லை எனத் தெரிவித்து யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

அவரை விசாரணை செய்த யாழ்.நீதிவான் பின்வரும் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

★ அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கே அத்தியாவசியப் பொருள்களைத் தனியார் வர்த்தகர்கள் விற்பனை செய்ய வேண்டும்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்று இளைஞர் சுட்டுக்கொலை

கிண்ணியா, ஜன. 26

திருகோணமலை தம்பலகாமம், பத்தினிபுரம் புகையிரத பாதைக்கு அடுத்துள்ள வீதியில் வைத்து நேற்றுக் காலை 10.30 மணியளவில் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலைசெய்யப்பட்டுள்ளார்.

கொலைசெய்யப்பட்டவர் தம்பலகாமம் தபால் நிலையத்தில் சிற்றூழியராகக் கடமையாற்றிவந்த சுப்பிரமணியம் முருகானந்தகரன் (வயது-34) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சம்பவதினம் தனது கடமைக்காக தம்பலகாமத்தை நோக்கிச் செல்லும் வழியிலேயே இவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என கந்தளாய் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஜனாதிபதி-ஹக்கீம் நேற்றிரவு பேச்சு

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றிரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசினார். அரசுடன் இணைந்து கொள்வது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத்துள்ள 9 கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதியுடன் ஹக்கீம் விரிவாகப் பேசினார் என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கோரிக்கைகளில் சிலவற்றை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார் என்றும் - ஏனையவை தொடர்பாக தாம் விரிவாக ஆராய்ந்த பின்னர் முடிவுசெய்வார் என்று ஹக்கீமிடம் கூறினார் என்றும் அறிய முடிந்தது.

## விடுதலைப் புலிகளின் ஆயுத தளபாடங்களை அழித்தொழிக்க அரசு உறுதிபூண்டுள்ளது

### பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய

கொழும்பு,ஜன.26

விடுதலைப் புலிகளின் கோட்டையான வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள அவர்களின் இராணுவ உடைமைகள் - ஆயுத தளபாடங்கள் -அழித்து ஒழிக்கப்படும். அவற்றை விட்டுவைத்தால் போர் இன்னும் பல வருடங்களுக்கு நீண்டு செல்லும்.

இவ்வாறு கடும் தொனியில் கூறியிருக்கிறார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோத்தபாய ராஜபக்ஷ.

விடுதலைப் புலிகளின் இராணுவ உடைமைகள் அவை எங்கிருந்தாலும் - வடக்கில் என்ன, கிழக்கில் என்ன - தெற்கில் என்ன - நாட்டின் எந்தப் பகுதியில் இருந்தாலும் அவற்றை நாம் அழித்தே தீருவோம்.

கடற் புலிகளின் தளங்கள் இருக்கும் வரை, அவர்களிடம் ஆட்லறி தளங்கள் இருக்கும் வரை, விடுதலைப் புலிகள் எங்கு அழிவுகளை உண்டாக்க விரும்புகிறார்களோ, அங்கு அதனைச் செய்வதற்கு அவர்கள் நினைப்பார்கள் - என்று ரொய்ட்டர் செய்தியாளருக்கு தொலைபேசி மூலம் பேசுகையில் கோத்தபாய தெரிவித்தார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## போர் நிறுத்த உடன்படிக்கைக்கு எதிராக பிக்குமார் நேற்று பேரணி

### ஜனாதிபதிக்கு மகஜர் கையளிப்பு

கொழும்பு, ஜன. 26

யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டு அடுத்த மாதம் 22ஆம் திகதியுடன் ஐந்து வருடங்கள் நிறைவடைகின்ற நிலையில் அந்த ஒப்பந்தத்தை அரசு உடனடியாகக் கிழித்தெறிய வேண்டும் எனக்கோரி தேசிய பிக்குகள் முன்னணியினர் நேற்று கொழும்பில் பாதயாத்திரை ஒன்றை நடத்தினர். ஜனாதிபதி செயலகத்தில் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் வண. தம்பர அமில தேரரின் தலைமையிலான இந்தப் பாதயாத்திரை பிற்பகல் இரண்டு மணிக்கு புறக்கோட்டை போதி மரத்தடிச் சந்தியில் ஆரம்பமாகி ஒல்கோட் மாவத்தையின் ஊடாக ஜனாதிபதிச் செயலகம் நோக்கிச் சென்றது.

இருப்பினும் இவர்களை ஜனாதிபதி செயலகம் வரை செல்லவிடாது பொலிஸார் ஹில்டன் ஹோட்டல் சுற்றுவட்டத்தில் வீதித்தடைகள் போட்டு தடுத்து நிறுத்தினர்.

அங்கிருந்து ஜனாதிபதி செயலகத்திற்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கடந்த வருட மோதல்களினால் 4,000 பேர் பலி - கண்காணிப்புக்குழு

கொழும்பு ஜன.26

படையினர், போராளிகள், பொதுமக்கள் ஆகிய மூன்று தரப்புகளிலும் கடந்த வருடத்தில் - 2006ஆம் ஆண்டில் 4,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்ததாக சர்வதேச செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இப்போது காகிதத்தில் மட்டுமே உள்ள போர் நிறுத்த உடன்படிக்கையை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மீண்டும், மீண்டும் மீறி வருகின்றன.

நாம் மட்டுமென்ன சர்வதேச சமூகமும் மோதல்களை நிறுத்துமாறு இரண்டு தரப்புகளிடமும் அடிக்கடி வேண்டுகோள் விடுத்த போதிலும் இரு சாராருமே கேட்பதாக இல்லை- என்றும் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ)

## வவுனியாவில் 3 வாரத்தில் 41 பேர் காணாமற் போயினர்!

### மனித உரிமைகள் ஆணைக்குழு அதிர்ச்சி

வவுனியா, ஜன. 26

வவுனியாவில் ஆட்கள் கடத்தப்படுதல், காணாமற் போகுதல் போன்ற சம்பவங்கள் அச்சமூட்டும் வகையில் அதிகரித்துள்ளன. கடந்த மூன்று வார காலப்பகுதியில் மட்டும் சுமார் 41 பேர் காணாமற் போயிருக்கின்றனர் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறையிடப்பட்டிருக்கிறது.

வடக்கிலும் கிழக்கிலும் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் ஆட்கள்காணாமற்போவது வவுனியாவிலேயே அதிகம்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் சிப்பாய் பலி

கொழும்பு, ஜன. 26

மணலாறு கொக்குத்தொடுவாய் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒரு மோதலில் படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயர் பகிர்வோம்



கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் S.வாமதேவன் அவர்களின் பாசமிகு மருமகன்

### சிவகடாட்சம் கௌதமன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் வாமதேவன் குடும்பத்தினருக்கும், சகோதரி வாசுகி சுரேஸ்குமார் குடும்பத்தினருக்கும், பெரியமாமனார் ச.இலகுநாதன் குடும்பத்தினருக்கும், அம்மம்மா (பெரியபிள்ளை), தாய், சகோதரர்களுக்கும், சிறியதாய் நளாயினி ரவிக்குமார் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.

**துயர்பகிர்வோர்:**

*ஞான. திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர், யாழ்.மத்திய கல்லூரி), இரா. செல்வவடிவேல்(ஆசிரியர்),நடராஜா நேசகுமார் (நாச்சிமார் கோயில்)*

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 14-12-1935
விண்ணில் 29-01-2004

அமரர்

### பரநிருபசிங்கம் பரம்சோதி

(ஓய்வுபெற்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரும், RRAN மாவட்ட இணைப்பாளரும். ஓய்வூதிய சங்கச் செயலாளரும்)

காலத்தால் கரையாத உம்
நினைவுகளுக்குக்
கண்ணீர்ப்பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கும்*

**மனைவி, மக்கள், மருமக்கள்.**
'மகேச பவனம்',
163, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 14 ★ 01 ★ 1924



மறைவு 27 ★ 12 ★ 2006

### கலாபூஷணம் அமரர் வல்லிபுரம் கந்தையா

(மணியம் மாஸ்ரர்)

நிகழும் விய ஆண்டு மார்கழித் திங்கள் பன்னிரெண்டாம் நாள் (27.12.2006) இரவு சிவபதமடைந்த எம் குடும்பத் தலைவரின் சபிண்டீகரண ஆத்மசாந்திப் பிரார்த்தனை தைத்திங்கள் பன்னிரெண்டாம் நாள் இன்று (26.01.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் குடும்ப சமேதராய் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*40/1, கலைமகள் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.* (க/51901) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி தில்லைநாதர் தபோமணி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் பயிரிக்கூடலையும் கருங்காலியையும் தற்பொழுது 383/ 22, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தில்லைநாதர் தபோமணி நேற்று (25.01.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தில்லைநாதரின் (முன்னாள் பிரதம லிகிதர், இ.போ.ச, கோண்டாவில்) மனைவியும் காலஞ்சென்ற சின்னத்தம்பி வேலுப்பிள்ளை (மலாயன் பென்சனர்) - மகேஸ்வரியின் சிரேஷ்ட மகளும் காலஞ்சென்ற இராமலிங்கம் - மீனாட்சியின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற காமாட்சிப் பிள்ளை (இடைப்பிட்டி), காலஞ்சென்ற புஸ்பலீலா (மலேசியா), சிவசுப்பிரமணியம் (ஓய்வு பெற்ற சிங்கப்பூர் Development Bank Advisor), காலஞ்சென்ற நடராஜா (கிளிநொச்சி), பத்மாவதி (வவுனியா), திலகவதி (கனடா) ஆகியோரின் சகோதரியும் கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற சிறாப்பர், மத்தியவங்கி), வைத்திலிங்கம் (ஓவசியர், மலேசியா), கமலாவதி (சிங்கப்பூர்), காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ்சென்ற கந்தையா (லிகிதர் C.T.O), காலஞ்சென்ற கந்தையா (உப தபாலதிபர், களபூமி) ஆகியோரின் மைத்துனியும் செந்தில்நாதன் (ஈஸ்வரன் ரேடர்ஸ்), இராஜேஸ்வரி, சிவனேஸ்வரி ஆகியோரின் தாயும் Dr.க.நடராஜா (வைத்திய அதிகாரி, தொல்புரம் அரசினர் வைத்தியசாலை), சிவஞானம் (முன்னாள் வட பிராந்திய முகாமையாளர், பெற்றோலியக் கூட்டுத்தாபனம், Deputy Operations Manager, சீனன்குடா), விஜயலட்சுமியின் மாமியும் Dr.N.ராஜேஸ்கண்ணன் (PGIM, University of Colombo), N.ராஜ்குமார் (Civil Engineer, Colombo), S.பார்த்தீபன் (கொழும்பு), சி.கணநாதன் (மருத்துவபீடம், Kurch University, Russia), செ.சுதர்சினி (3ஆம் வருடம், விஞ்ஞான கற்கைகள், கல்வியியல் கல்லூரி, வவுனியா), ந.ஸ்ரீஸ்கந்தராஜா (A/L மாணவன், St.Johns கல்லூரி, யாழ்ப்பாணம்), ராஜேஸ்கண்ணன் ரோகினி (கொழும்பு), ராஜ்குமார் யாழினி (கொழும்பு) ஆகியோரின் பேர்த்தியும் பிரணவனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2007) மு.ப. 11மணிக்கு 383/22, கோயில் வீதி, நல்லூர் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த் அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**383/22, கோயில் வீதி,**
**நல்லூர்.** (57480) தகவல்: பிள்ளைகள்.

## தவறிவிட்டது

குடத்தனை மேற்கைச் சேர்ந்த கந்தையா சிவஞானம் என்பவரது மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வரி அனுமதிப்பத்திரம், எரிபொருள் அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் புலோலி, பருத்தித்துறை பிரதேச சபை அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றனர். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (க/51921)

## மாடு காணாமற் போய் விட்டது

நிறம் Brown (மண்ணிறம்) மஞ்சள் பட்டு கழுத்தில் இருக்கிறது. செ.முருகையா, 34, 2ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். மேற்படி விலாசத்திற்கு தொடர்புகொள்ளவும்.
தொ.பே.: 021 4590664
தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## ஞானோதய அக்கடமி

சங்கத்தானை சாவகச்சேரி.

எமது கல்வி நிலையத்தின் அனைத்து வகுப்புகளும் எதிர்வரும் 28.01.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

ஆசிரியர்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### திருமதி.சிவபாக்கியம் சங்கரப்பிள்ளை

மண்ணில் 15-06-1930 விண்ணில் 06-02-2006

கருவறையில் எமைச்சுமந்து கனவுகள் பல கண்டீர்களே
அம்மா அம்மா என்று இனியாரை நாம் கூப்பிடுவோம்
கவலை கொள்ள வைத்துவிட்டு காலவழி சென்றீரோ?
அம்மா உங்கள் நினைவுகள் எம் உணர்வோடு நிதம் வாழும்

திருமதி விஜயா - இராமச்சந்திரன் (மகள்)

கலா பவனம், தாவடி தெற்கு, கொக்குவில்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி

### கந்தையா மகேஸ்வரி

தோற்றம் 04.02.1928 மறைவு 27.12.2006

கடந்த 27.12.2006 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், நாளை (27.01.2007) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

24, அச்சுக்கூட ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (57470) குடும்பத்தினர்.

## நினைவில் மலரும் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### செல்லத்துரை பாலசிங்கம் (பத்தர்)

தோற்றம் : 19.05.1932
மறைவு : 18.01.2005
திதி: 26.01.2007

பாசத்தின் திருவுருவே! பண்பின் உறைவிடமே!
எம்குடும்பத்தின் அணையாத ஒளிவிளக்கே!
எம்மை வளர்த்து ஆளாக்கி எங்கள் ஒவ்வொருவரதும்
இதயங்களில் குடியிருக்கும் அன்புத்தெய்வமே!

வாழ்க்கை என்ற நீண்ட பயணத்தில் இரண்டு ஆண்டுகள்
ஆனாலும் உங்கள் நினைவுகள் எம் நெஞ்சை விட்டு
மறையவே மறையாது!
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 31 ★ 08 ★ 1964



அழிப்பு 16 ★ 01 ★ 1997

### சிவரட்ணம் உதயகுமார்

(கலட்டிக் கண்ணன்)

திதி : அட்டமி 25.01.2007

பனிபோல் வந்தீர் கனிவாய் [illegible]னை மணந்தீர்
சிறந்தீர் வாழ்வினில் அடைந்தீர் செல்வங்கள் - ஐந்தினைப்
பெற்று வாழ்ந்தீர் பெருமைகள் பல சேர்த்தீர்
இனிது மகிழ்ந்தேன் இல்லறத்தில் - நானும்
கணப்பொழுதில் அவையனைத்தும் கனவாகப்
போகுமென கடுகளவும் கருதவில்லை காணும்
சத்தியமாய் வாழ்ந்த எந்தன் உத்தமரை
சதி செய்து பலியெடுத்த பாவிகளே - நீவிர்
ஓர் உயிரைக்குடிப்பதில் காணும் சுகந்தனிலும் - அவ்வுயிரை
இழப்பதில் நாம் காணும் சோகந்தான் மிகையானதே - கேளீர்
எம் உன்னதமான உறவை உருக்குலைய வைத்தீர்களே

பேற்றினில் சிறந்தது பிள்ளைச் செல்வமாம்
நாம் உமக்கு ஒருவரல்ல ஐவராவோம் - அப்பா
எம்மோடு ஒத்த வயதினர் தம் தந்தையுடன்
மகிழ்ந்திருக்கும் வேளைதனில் உம்
இடைவெளியெமை எந்நாளும் வாட்டுதப்பா
சோகம் தாங்கும் எம்மிதயம் உங்கள்
பிரிவினைத் தாங்க ஏனோ மறுக்குதப்பா - எங்கள்
இலட்சியப்பாதையில் முன்னேறுவோம் - உங்கள்
ஆசையை அன்போடு பூர்த்தி செய்வோம்.

பத்துத் திங்கள் உனைச் சுமந்தேன்
பத்தே நிமிடத்தில் உனை இழந்தேன்
பத்தாண்டுகள் சென்றாலும் - எந்தன்
பண்புமிகு கண்ணனை மறவேன் நான்
கடைசியாய் பிறந்த பிள்ளை நீ எனக்கு
கடமைகள் செய்வாய் என நான்
காத்திருந்த வேளைதனிலே
காணாமல் போனாயே கண்ணா
கலங்கி அழுகின்றேன் - காணவில்லை
என் கண்ணான கண்ணனை.

அன்பான தம்பியே கண்ணா - எம்
குலவிளக்கே நீ தானே - எம்
கோட்டையிலே ராஜாவும் நீதான்
எம்மில் சிறந்தவனும் நீதான்
நாம் இழந்து நிற்பதும் உனைத்தான்
எமை எல்லாம் வழி நடத்தினாய் - அன்று
உன் வழியை தேடிச்சென்றுவிட்டாய் - இன்று
உனை எம் கண்ணாகவல்லோ காத்து வந்தோம்
ஏன் காணாமல் போனாய் கண்ணா!
காலங்கள் பல கடந்தாலும் எம் கோலங்கள்
மாறினாலும் எம் உயிர் பிரியும் வரை
உன் நினைவு எமை வாட்டும் ஐயா!

*என்றும் சாந்தி பெறுக!*

*''கோகுலம்''*
*91, இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

- குடும்பத்தினர். (57412)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

851 நீலம்

வெற்றி இலக்கங்கள்

விருச்சிகம் 06 12 22 43

23-01-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4799478 - 4814891

ஜக்பொட் பரிசு ரூபா.1,731,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 338,010 | 10/- | 3,380,100/- |
| 2 இலக்கங்கள் | 31,061 | 20/- | 621,220/- |
| 1 இல. + லக்கினம் | 30,919 | 30/- | 927,570/- |
| 2 இல. + லக்கினம் | 2,857 | 100/- | 285,700/- |
| 3 இலக்கங்கள் | 824 | 500/- | 412,000/- |
| 3 இல. + லக்கினம் | 69 | 5,000/- | 345,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,731,900/- | |
| மொத்தம் | | | 6,471,590/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 403,750 | | 7,495,090/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,487,100/-

[illegible]

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 4810867-1-53 |
| அனுராதபுரம் | 4807732-6-05 |
| மொனராகலை | 4811922-5-32 |
| குருநாகல் | 4813304-7-8[illegible] |
| கொழும்பு | 4812528-5-5[illegible] |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

## அவசரகால விதிகளின் உள்ளார்ந்தம் அம்பலத்துக்கு

✱ படையினரின் சுற்றிவளைப்புத் தேடுதலின் பின்னர் சாவகச்சேரியில் ஆறு இளைஞர்களைக் காணவில்லை.

✱ மன்னாரில் ஐந்து இளைஞர்களைக் காணவில்லை என்று மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

✱ தலைநகர் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் இந்த ஆண்டு பிறந்த கையோடு நான்கு நாட்களில் மட்டும் பதினொரு தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டுக் காணாமற் போயுள்ளனர்.

- கடந்த சில வாரங்களாகத் தினசரி வெளியாகும் செய்திகள் சிலவற்றின் மாதிரிகளே மேலே மறுபிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.

தமிழர் தாயகப் பிரதேசத்தில் - அதுவும் அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் - ஆயுத முனையில் ஆட்கடத்தலும், கடத்தப்பட்டோர் காணாமற் போதலும் கட்டுமட்டின்றி அதிகரித்திருக்கின்றன.

வடக்கில் - யாழ் குடாநாடு, வன்னியில் - வவுனியா, மன்னார், கிழக்கில் - திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பகுதிகளில் இவ்வாறு தமிழ் இளைஞர்கள் சீருடையினராலும் மர்மக் குழுக்களினாலும் கடத்தப்படுகின்ற கொடூரம் கணக்கு வழக்கின்றி அதிகரித்திருக்கின்றது.

1995 - 96 இல் யாழ் குடாநாட்டை அரசுப்படைகள் கைப்பற்றியகையோடு ஆள்கள் காணாமற் போகும் அனர்த்தம் அங்கு எல்லை மீறி இடம்பெற்றது. ஆயிரத்தையும் தாண்டி பல நூற்றுக் கணக்கானோர் மர்மமாக மறைந்தனர். செம்மணி மனிதப் புதைகுழிகளிலிருந்து சிலரின் சடல எச்சங்கள் மீட்கப்பட்டனவாயினும், ஏனையோரின் கதி என்னவாயிற்று என்பது இன்றுவரை தெரியவில்லை. அது ஆண்டவனுக்கே வெளிச்சம். அதே காதை இப்போது அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயக தமிழரின் ஏனைய வாழ்விடங்களிலும் பெரும் சத்தம் சந்தடியின்றி அரங்கேறிக்கொண்டிருக்கின்றது.

இந்தப் பேரவல நிலைக்கான பின்னணியை அம்பலப்படுத்தியிருக்கின்றது ஜெனிவாவை மையமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு (International Commission OF Jurists).

பயங்கரவாதத்துக்கு எதிரான ஒழுங்கு விதிகள் என்ற பெயரில் - அவசரகால ஏற்பாடுகள் வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி - அரசு நடைமுறைப்படுத்தும் விசேட சட்டவிதிகளே பலவந்தமாக ஆள்கள் கடத்தப்பட்டு காணாமற் போவதற்கான மூல காரணமாக அமைந்துள்ளன என்று அந்த நிறுவனம் அப்பட்டமாகத் தெரிவித்து உண்மையைப் போட்டுடைத்திருக்கின்றது.

வலோற்காரமாக ஆள்களைக் காணாமற் போகச் செய்யும் கொடூரத்திலிருந்து அனைவரையும் பாதுகாப்பது தொடர்பான - 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் 20ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட - ஐ. நா. சர்வதேசப் பட்டயத்தில் ஒப்பமிட்டு, அதை முழு அளவில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்நிலைமையைச் சீரடைய வைக்குமாறு இலங்கையை சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்திக் கேட்டிருக்கின்றது.

இலங்கையில் தொடர்ந்தும் ஆள்கள் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யும் கொடூரத்துக்கு அவசரகாலச்சட்ட விதிகளும், பயங்கரவாதத் தடுப்புச்சட்டமுமே பிரதான காரணங்கள் என்று ஐ. நாவின் செயலணிக்குழு 1999 இலேயே தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தமையை நினைவூட்டியுள்ளன. சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு இப்போது தனது வாதத்துக்கு ஆதாரமாக முன்வைத்திருக்கின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இடைநிறுத்தி வைக்கப்படுவதாக, அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து 2002 முற்பகுதியில் அறிவிக்கப்பட்டது.

ஆனால், இப்போது மீண்டும் நடந்திருப்பது என்ன? 'பழைய குருடி கதவைத் திறவடி' என்ற மாதிரி பழைய - மேற்படி - சட்டத்திலும், ஒழுங்கு விதிகளிலும் இருந்த கெடுபிடி ஏற்பாடுகள் - ஆள்கள் பலவந்தமாகக் காணாமற் போகின்ற செயல்களுக்கு ஊக்கமளிக்கின்ற ஒழுங்குவிதிகள் - மீண்டும் 2006 டிசெம்பர் 06இல் அவசரகால நிலைமையின் கீழான பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் மீளவும் உயிர்ப்புப் பெற்றிருக்கின்றன. அவையே ஆட்கள் காணாமற் போகும் கொடூரத்தின் சூத்திரதாரிகளுக்கு உதவியாகவும், உடந்தையாகவும், உந்துசக்தியாகவும், ஊக்கமளிப்பவையாகவும் அமைந்துள்ளன என்பதை சர்வதேச ஜூரர்கள் சபை தெளிவாக வெளிப்படுத்திச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஆள்கள் பலவந்தமாகக் காணாமற்போகச் செய்யும் நடவடிக்கைகள் தொடர்பாக இலங்கையின் கடந்தகால சரித்திரத்தை மீள நினைவுபடுத்தியுள்ள அந்த அமைப்பு, 1980களில் மட்டும் இங்கு இவ்வாறு 13 ஆயிரம் பேர் காணாமற்போகச் செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பது தொடர்பான முறைப்பாடுகள் ஐ. நா. செயலணிக்குக் கிடைத்திருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இது தொடர்பாக 1990 களில் நியமிக்கப்பட்ட நான்கு ஜனாதிபதி ஆணைக்குழுக்கள் குறைந்தபட்சம் 20 ஆயிரம் பேர் இவ்வாறு காணாமற் போகச் செய்யப்பட்டுள்ளனர் என்பதை ஊர்ஜிதப்படுத்தியுள்ளமையையும் அந்த அமைப்பு நினைவூட்டியுள்ளது.

சட்டம் வழங்கிய அதிகாரமும் அரசுத் தலைமை வழங்கும் உற்சாகமும் தமிழர் தரப்பு மீது கொடூரமான வன்முறையாகக் கட்டவிழ்கின்றது. அரச ஒடுக்குமுறையின் பயங்கரவாதக் கருவியான சீருடைத் தரப்புக்கு - அதன் அத்துமீறல் நடவடிக்கைகளுக்கு - உந்துசக்தியாகத் திகழ்கின்றன இந்த அவசரகாலச்சட்ட விதிகள் என்ற உண்மையையே சர்வதேச அமைப்புகள் இப்போது அம்பலப்படுத்தி வருகின்றன.

அண்மைக்காலத்தில் ஐ. நா. அமைப்புகள், சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள், சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு போன்ற கண்காணிப்பு மையங்கள் பகிரங்கப்படுத்திவரும் அறிக்கைகள், அறிவிப்புகள் இலங்கை அரச பயங்கரவாதத்தின் உண்மைக் கொடூரத்தைத் தோலுரித்துக் காட்டுவனவாக அமைந்திருப்பது கவனிக்கத்தக்கது.

# வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்களை நிபந்தனையின் அடிப்படையில் மீளக்குடியமர்த்த முயற்சி

## பதிவுகளை மேற்கொள்ளுமாறு அரச அதிபர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.26

வலி. வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை நிபந்தனைகளின் அடிப்படையில் மீண்டும் சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் இவர்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் கே. கணேஷ் மேற்கொண்டுள்ளார்.

அதன் பிரகாரம் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட 36 கிராம சேவையாளர் பிரிவுகளில் ஏற்கனவே வசித்த குடும்பங்களே இவ்வாறு மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கென சம்பந்தப்பட்ட மக்களை நேரடியாகச் சந்தித்து விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்தார். இந்த விசாரணைகளை தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய பிரதேச செயலகங்களில் நடத்தவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### வெளி மாவட்டங்களில் வசிப்போருக்கு

யாழ். மாவட்டத்துக்கு வெளியே வசிக்கும் மேற்படி உயர்பாதுகாப்பு வலயப் பகுதியைச் சேர்ந்த மக்கள் தமது விவரங்களை எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதிக்கு முன்னர் தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி 4 நிபந்தனைகளின் அடிப்படையிலேயே மக்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

*அந்த நிபந்தனைகளாவன:*

✱ மீளக்குடியேற விரும்பும் குடும்பங்கள் மாவட்ட செயலாளர், படை அதிகாரிகள் முன்விசாரணைக்குத் தோற்றவேண்டும்.

✱ பாதுகாப்புத் தரப்பினருக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாது என்று உத்தரவாதம் தரவேண்டும்.

✱ மீளக்குடியேறும் பிரதேசத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக தமது நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும்.

✱ அரசினால் வழங்கப்படும் இலவச உலர் உணவைப் பெற்றுக் கொள்ள முடியாது.

மீளக்குடியேற விரும்புவோர் பிரதமகுடியிருப்பாளர் பெயர், அங்கத்தவர் எண்ணிக்கை, இடம்பெயர்வின்போது குடியிருந்த கிராம சேவையாளர் பிரிவும் விலாசமும், தற்போது வதியும் விலாசம் ஆகிய விவரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக தொடர்புகளுக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகத்துடன் 021 222 3952 என்ற தொலைபேசியுடன் அல்லது **dsthellipalai@sltnet.lk** என்ற மின்னஞ்சல் முகவரியுடனும் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-8)

## 4ஆவது நாளாக வடமராட்சியில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

நெல்லியடி, ஜன.26

வடமராட்சிப் பிரதேச பாடசாலை மாணவர்கள் நான்காவது நாளாக நேற்றும் பகிஷ்கரிப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

காணாமற்போன ஹாட்லிக் கல்லூரி மற்றும் வேலாயுதம் ம.வி. ஆகியவற்றின் மாணவர்களை விடுவிக்குமாகோரி கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வடமராட்சியில் உள்ள பாடசாலை மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

(203-15)

## நாவலர் வீதியில் புதன் நள்ளிரவு இரு வீடுகளில் அடுத்தடுத்துக் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன.26

யாழ். நாவலர் வீதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 12.30 மணியளவில் அடுத்தடுத்து இரண்டு வீடுகளில் அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி நகை, பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

வாள், கத்தி, துப்பாக்கிகள் சகிதம் சென்ற கொள்ளையர்கள் வீட்டைச் சோதனையிடப் போவதாகத் தெரிவித்தனர். வீட்டில் இருந்தவர்களின் அடையாள அட்டைகளைப்பெற்றுக் கொண்டனர். அதன் பின்னர் வீடுகளைச் சல்லடை போட்டுத் தேடுதல் நடத்தினர்.

முதலாவது வீட்டில் இருந்து நகைகளை அபகரித்த கொள்ளையர்களிடம், வீட்டுத் தலைவி தனது தாலியைத் தருமாறு மன்றாடினார். தாலியை மட்டும் கொடுத்துவிட்டு 13 பவுண் நகைகளைக் கொண்டு தப்பிவிட்டனர்.

அதன்பின்னர்-

அதேபகுதியில் அருகில் உள்ள மற்றொரு வீட்டுக்குச் சென்ற கொள்ளையர்கள் அங்கிருந்த 15 பவுண் நகைகளையும் 30 ஆயிரம் ரூபா பணம் மற்றும் கைத்தொலைபேசிகளையும் அபகரித்துக் கொண்டு சென்றனர்.

இச்சம்பவங்கள் குறித்து யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(அ-1-வ)

## உரும்பிராய்ப் பகுதியில் நேற்றுக்காலை எரிந்த நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.26

உரும்பிராய் பகுதியில் எரியூட்டப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

இணுவில், திரையரங்க வீதியைச் சேர்ந்த நாகேந்திரம் அருமைதாசன் (வயது 37) என்பவரின் சடலமே மீட்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிரஸ்தாப நபர் மோட்டார் சைக்கிள் வாங்கி வியாபாரம் செய்பவர்.

நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் அவர் வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டார்.

அவர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் இணுவில் இளந்தாரி வைரவர் கோயிலடியில் காணப்பட்டுள்ளது.

அதன் பின் உரும்பிராய் பிள்ளையார் கோயிலடியில் சடலம் ஒன்று இருப்பதாக அறிந்து அங்கு சென்று பார்த்தபோது அவரது உடல் எரியூட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது - என்று அவரது தந்தை நீதிவான் விசாரணையில் தெரிவித்தார்.

அவரது சடலத்தை பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

இறந்தவரின் கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள், குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினரின் சோதனையின் பின் சுன்னாகம் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டது. (அ-1-4-86-78)

## பருவ மழை வீழ்ச்சி குறைவால் விளைச்சல் பாதிக்கப்படும் அபாயம்

யாழ்ப்பாணம், ஜன.26

கடந்த வருடம் எதிர்பார்க்கப்பட்ட மழை வீழ்ச்சி குறைவாக இருந்ததன் காரணமாக நெல் விளைச்சல் குறைவடையக் கூடிய சாத்தியம் இருப்பதாக யாழ். வளிமண்டல திணைக்கள பணிப்பாளர் வி. புஸ்பநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்தில் மொத்தம் 926.5 மி.மீற்றர் மழையே பெறப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் மாதம் 278 மி.மீ. மழை எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 67.1 மி.மீற்றர் மழையே பெய்துள்ளது. நவம்பர் மாதத்திலும் 336.1 மி.மீற்றர் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் 309.9 மி. மீற்றர் மழையே பெய்தது.

ஒக்ரோபர், நவம்பர் மாத மழை வீழ்ச்சியில் காணப்பட்ட ஒழுங்கு டிசெம்பர் மாதத்தில் இருக்கவில்லை. வங்கக் கடலில் வழமையான தாழமுக்கம் ஏற்படாமையே இதற்கு காரணமென்று பணிப்பாளர் மேலும் கூறினார். (அ-1-88)

## ஆயுள்வேத மருத்துவர் பரீட்சை யாழ்ப்பாணத்திலும்

யாழ்ப்பாணம், ஜன.26

ஆயுள்வேத மருத்துவர்களுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நாளை சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது. இப்பரீட்சை கொழும்பில் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

(1-203)

### நாளை

தை - 13
சனிக்கிழமை
27.01.2007
திதி: நவமி
பிற்பகல் : 04.39
நட்சத்திரம் : பரணி
முற்பகல்: 09.02 வரை
கார்த்திகை விரதம்
சுபநேரம் : 03.36 - 05.06
ராகுகாலம்: [illegible]

## முத்திரைத் தட்டுப்பாட்டால் மக்கள் பெரும் கஷ்டம்

நல்லூர், ஜன.25

யாழ்ப்பாணம் பிரதம தபாலகம் உட்பட உப அஞ்சல் அலுவலகங்களில் முத்திரைகளுக்குத் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் குடாநாட்டில் தூர இடங்களில் வசிக்கும் தமது உறவினர்களுக்கான கடிதங்களைக் கூட அனுப்ப முடியாது மக்கள் கஷ்டப்படுகின்றனர்.

இந்தியாவில் இருந்து முத்திரைகள் தருவிக்கப்பட்டதாக செய்திகள் வெளியான போதிலும் யாழ். குடாநாட்டிற்குத் தேவையான முத்திரைகள் இதுவரை யாழ். பிரதமதபாலகத்திற்கு கிடைக்கவில்லை.

சில படிவங்கள் மட்டுமே கொழும்பில் இருந்து அனுப்பப்பட்டுள்ளதாகவும் முத்திரைகள் மற்றும் அலுவலகத்திற்குத் தேவை யான ... என்பன கிடைக்கவில்லை என்றும் தபாலக வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

வெளிமாவட்டங்களில் உள்ளவர்களுடன் கடிதம் மூலம் தொடர்பு கொள்வது ஒரு புறமிருக்க -

குடாநாட்டில் வாழும் தமது உறவினர்களுடன் நேரில் சென்று சொந்த, தனிப்பட்ட விடயங்களைப் பரிமாறிக் கொள்வது பல வகையிலும் கஷ்டமான காரியமாகவும், பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டிய செயலாகவும் மாறிவிட்டது.

தபால் மூலம் தொடர்பு கொள்வதே பாதுகாப்பு நிறைந்த ஒரு மார்க்கமாக உள்ளது. முத்திரைகள் இல்லாததால் அதுவும் தடைப்பட்டுப் போனதாக மக்கள் தரப்பில் கவலை தெரிவிக்கப்படுகிறது.

(அ-1-111)

### குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

## கச்சேரி - நல்லூர் வீதியில் மூன்று இளைஞர்கள் கைது

கச்சேரி - நல்லூர் வீதியிலுள்ள வீடு ஒன்றில் வைத்து இளைஞர்கள் மூவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்த சத்தியராஜ் மோகனகாந் (வயது - 22) அவரது வீட்டில் தங்கியிருந்த மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தசாமி சசீஸ் கண்ணா (வயது - 34), உக்குளான் குளம், வவுனியாவைச் சேர்ந்த திரவியநாதன் திரவியவேந்தன் (வயது - 20) ஆகியோர் நேற்று அதிகாலை 1.15 மணியளவில் வீட்டில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர் என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1-4)

## சுதுமலை இளைஞனை காணவில்லையாம்!

சுதுமலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளதாக அவரது பெற்றோர் யாழ். மனித உரிமை ஆணைக்குழு வில்முறைப்பாடு செய்துள்ளனர்.

சுதுமலை வடக்கு, மானிப்பாயைச் சேர்ந்த குணரட்ணம் கஜேந்திரன் (வயது - 30) என்பவர் நேற்றுக்காலை தனது வீட்டிலிருந்து யாழ். நகரினுள் வர்த்தக நிலையம் ஒன்றிக்கு வேலைக்காக சென்றவேளை காணாமற் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-4)

## கடற்றொழிலாளர் சங்க விற்பனை நிலையம்

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச விற்பனை நிலையத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க. ஸ்ரீமோகனன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தத்திறப்பு விழாவில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் கே. தர்மலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1-8)

## குருநகரில் நாளை மருத்துவமுகாம்

குருநகர்ப் பகுதி மக்களுக்கான இலவச மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு குருநகர் சனசமூக நிலையலத்தில் நடைபெறும்.

இரத்த அழுத்தம், நீரிழிவு, பெண் நோயியல், தொழு, சிக்குன்குனியா, மலேரியா ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருந்துகள் வழங்கப்படுமென கழகத் தலைவர் லயன் வ. ஸ்ரீபிரகாஸ் தெரிவித்தார். (1)

## உரும்பிராயில் நாளை குடும்ப அட்டை மீளாய்வு

உரும்பிராய் தெற்கு ஜே/265 கிராம சேவகர் பிரிவில் உள்ளவர்களது உலர் உணவு அட்டைகள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிவரை கிராம சேவகர் அலுவலகத்தில் வைத்துப் மீளாய்வு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

## உளமகிழ் செயற்பாடாக உதைப்பந்தாட்டப் போட்டி

தற்கால அனர்த்தத்தினால் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி வாழும் இளைஞர்களின் உள மகிழ் செயற்பாடாக உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்றை சேவா லங்கா மன்றம் ஒழுங்கு செய்துள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 9.00 மணிக்கு கரவெட்டி யாழ். ஞானாசாரியார் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது. இதில் சென். ஜேம்ஸ் ஆண்கள் கல்லூரி அணியும், வடமராட்சி சுடரொளி நலன்புரி நிலைய அணியும் மோதுகின்றன. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வைத்தியசாலையில் மருந்துவகைகளுக்குத் தட்டுப்பாடு

கிளிநொச்சி மருத்துவமனையில் மருந்துப் பொருள்களுக்கான தட்டுப்பாடு தொடர்ச்சியாக நிலவிவருவதாக கிளிநொச்சி பொது மருத்துவமனையின் பணிப்பாளர் இரத்தினம் சதானந்தம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்ச்சூழல் உருவான பின்னர் எமது மருத்துவமனையில் மருந்துத் தட்டுப்பாடு நிலவிவருகின்றது. இந்த மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக சுகாதார அமைச்சிற்கு கடிதங்கள் அனுப்பியும் எமக்குரிய மருந்துகள் முழுமையாக வந்து சேரவில்லை. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, மன்னாரின் இரு பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழுகின்ற மக்கள் எமது மருத்துவமனையை நம்பியுள்ளனர்.

மருத்துவமனையில் ஏற்படும் மருந்துத் தட்டுப்பாடு மக்களை நேரடியாகப் பெரும் பாதிப்புக்குள்ளாக்கும் எனத் தெரிவித்தார்.

இம் மருந்துத் தட்டுப்பாடு தொடர்பாக கிளிநொச்சிப் பிரதி மாகாண சுகாதாரப் பணிமனையின் முக்கிய அதிகாரியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், போர்நிறுத்த உடன்பாடு ஏற்பட்டு ஒரு அமைதியான சூழலில் போக்குவரத்துகள் இலகுவாக இடம்பெற்ற காலங்களில் மருந்துகள் எமக்குத் தேவைக்கேற்றவகையில் கிடைத்தன. ஆனால், தற்போது ஏற்பட்டிருக்கின்ற சூழல் காரணமாக மருந்துப் பொருள்கள் மருத்துவமனைகளுக்கு கிடைப்பதில் நெருக்கடிகள் உள்ளன எனத் தெரிவித்தார். (த)

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குச் சென்று மகஜரை கையளிப்பதற்காக தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் வண. தம்பர அமில தேரர் உட்பட ஒரு சிலர் மாத்திரம் பொலிஸாரால் அனுமதிக்கப்பட்டனர். இந்தப் பாதயாத்திரையில் நூற்றுக் கணக்கான பிக்குகளும் பல அரசியல்வாதிகளும் கலந்துகொண்டனர். (ஐ)

## விடுதலைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளின் இராணுவ உடைமைகளை அழித்தொழிக்க அரசாங்கம் உறுதிபூண்டுள்ள போதிலும், அரசாங்கம் அமைதியை நிலைநாட்டுவதில் அக்கறை கொண்டுள்ளதாகவும் பாதுகாப்புச் செயலாளர் மேலும் கூறியுள்ளார்.

அரசாங்கம் இராணுவத் தீர்வை நாடவில்லை. அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதிலேயே அரசு நேர்மையாகச் செயற்படுகிறது. ஆனால், பிரச்சினை என்னவெனில், ஒரு பக்கத்தினால் மட்டும் அமைதியைக் கொண்டுவந்துவிட இயலாது.

**அழுத்தம் கொடுக்கிறோம்**

விடுதலைப் புலிகள் தாக்குதல்களை ஆரம்பித்த பின்னரே நாங்கள் பதிலுக்குச் செயற்பட வேண்டியதாயிற்று. அதனால் அவர்கள் மீது அழுத்தம் கொடுத்து வருகின்றோம். ஆகையால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்களாயின் அது மிகவும் நல்லது-

'நான் சமாதானத்துக்குத் தயார்' என்று பிரபாகரன் வெளிப்படையாகச் சொல்வதாக இல்லை. தமக்கு தனியான ஈழமே வேண்டும் என்றே அவர் எப்போதும் சொல்கிறார். அது பெரும் பகிடியாகும். அவர்களும் நேர்மையாக நடந்துகொள்ள வேண்டும் - என்று மேலும் கூறியிருக்கிறார் கோத்தபாய.

தமது இராணுவ உடைமைகள் அழித்து ஒழிக்கப்படுவதைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் என்ன செய்யவேண்டும் என்று செய்தியாளர் கேட்டதற்கு -'

பிரபாகரன் எங்களுடன் பேச முடியும் என்று நான் நம்புகின்றேன். நோர்வே அனுசாரணையாளர்கள் இருக்கிறார்கள். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் உள்ளனர். "நாங்கள் நேர்மையாக, உண்மையாகவே பிரச்சினை குறித்துப் பேசுவதற்கு விரும்புகிறோம்'' என்று பிரபாகரன் அவர்களிடம் கூறலாம். அவர் நேர்மையான முறையில் செயற்பட வேண்டும் - என்று பதிலளித்திருக்கிறார் கோத்தபாய.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியிருப்பது குறித்து விடுதலைப் புலிகளின் கருத்தை உடனடியாகத் தம்மால் பெறமுடியவில்லை என்று ரொய்ட்டர் செய்தியாளர் குறிப்பிட்டிருக்கிறார். (அ)

## ஆட்கள் காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் மூலம் முடிவுகண்டு நிலைமையைச் சீரடைய வைக்குமாறும்-

சர்வதேச ஜூரர்களின் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் இலங்கைக்கு விடுத்த பகிரங்கவேண்டுகோளில் கோரியிருக்கின்றது.

இலங்கையில் ஆட்கள் பலவந்தமாக காணாமற்போகச் செய்யும் பிரச்சினைக்கு அவசரக்காலச் சட்டவிதிகளும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டமுமே பிரதான காரணங்கள் என்பதை ஐ.நா. செயலணிக்குழு 1999 இலேயே தெளிவாக வெளிப்படுத்தியிருப்பதை சுட்டிக்காட்டும் சர்வதேச ஜூரர்கள்; ஆகவே, தற்போதைய பயங்கரவாதத்தடுப்பு ஒழுங்குவிதிகளை மறுசீரமைக்கும்படியும் இலங்கை அரசைக் கேட்டிருக்கின்றது.

பயங்கரவாதத்தடுப்புச் சட்டம் சிலகாலமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்ததை கவனத்தில் கொண்டுள்ள அந்த அமைப்பு, அதேசமயம் அந்தச் சட்டத்தில் உள்ள சில முக்கிய அம்சங்கள் 2006 டிசம்பரில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஒழுங்குவிதிகளின் மூலம் மீளக்கொண்டு வரப்பட்டிருப்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

''பாதுகாப்புத் தொடர்பான இந்தச் சட்டவிதிகள் குறித்து இலங்கை அரசும், நாடாளுமன்றமும் உடனடியாக மீளாய்வு செய்யவேண்டியது அவசியமானது'' - என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

காணாமற்போதல் தொடர்பான சர்வதேசப் பட்டயத்தை இலங்கை ஏற்று ஒப்பமிட்டு நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அந்த அமைப்பு, ''இலங்கையில் காணமால்போதல் பிரச்சினை தொடர்பான சரித்திரத்தை நோக்கும்போது, இத்தகைய சர்வதேச பட்டயத்தில் இலங்கை ஒப்பமிடுவ்து சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கையாக இருக்கும். அப்படிச் செய்வதன் மூலம் இத்தகைய கொடூரக் குற்றங்களை அரசு சகித்துக்கொள்ளாது என்ற அரசியல் செய்தியை அரசு வெளிப்படுத்த முடியும்'' - என்று தெரிவித்துள்ளது.

இலங்கையின் சிக்கல்கள் பற்றிய சரித்திரத்தை மேற்கோள்காட்டிய அந்த அமைப்பு, 1980களில் ஐ.நா. செயலணிக்குழு ஒன்றுக்கு 13 ஆயிரம் பேர் காணாமற்போனதைப் பற்றிய முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

இலங்கையில் தலைநகர் கொழும்பு உட்பட பல்வேறு இடங்களில் ஆட்கள் காணாமற் போகின்றமை தொடர்பான முறைப்பாடுகள் தொடர்ந்து கிடைத்து வருவதையும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (உ)

## மல்வத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

இச்சந்திப்பு சுமார் அரைமணிநேரம் நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி மல்வத்தை பீடாதிபதியிடம் கூறியதாவது:-

நாட்டில் நிலவிவரும் பயங்கரவாதத்தை ஒழித்து நாட்டை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டுசெல்ல பல திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு வேண்டும் அவ்வாறு அனைவரும் ஒத்துழைத்துச் செயற்பட்டால் நாட்டை அபிவிருத்திப்பாதைக்கு கொண்டு செல்லமுடியும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 5.45 மணியளவில் இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

தாழ்வுப்பாடு கரையோரப் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாம்மீது இரண்டு படகுகளில் வந்த விடுதலைப் புலிகள் இத்தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று ஊடக நிலையம் தெரிவித்தது. இத்தாக்குதலில் கடற்படைச்சிப்பாய் காயமடைந்துள்ளார்.

## மணலாற்றில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் நடைபெற்ற பகுதியில் இருந்து விடுதலைப்புலிகள் இயக்க பெண் உறுப்பினர் ஒருவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்திருக்கிறது.

விடுதலைப்புலிகளுக்கும், அரசுப்படைகளுக்கும் இடையே இப்பகுதியில் இரு தடவைகள் மோதல் இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நிர்ணயித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

★ அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட விலைகளுக்கு அத்தியாவசியப் பொருள்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என்பதை விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகள், கிராம சேவையாளர்களைக் கொண்டு வர்த்தக நிலையங்களில் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும்.

★ இச் செயற்பாட்டை அவர்கள் மூலம் செய்விக்குமாறு அரச அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் உதவி அரசாங்க அதிபர்களுக்கு நீதிமன்றம் கட்டளையிடுகின்றது.

★ இது தொடர்பான விவரமான அறிக்கையை யாழ். அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள் அடுத்த மாதம் 6ஆம் திகதியன்று நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

★ தனிப்பட்ட வர்த்தகர்கள் அரச அதிபரால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு கூடுதலாக பொருள்களை விற்பனை செய்வது கண்டறியப்பட்டால், அவர்களுக்கு எதிராக குறிப்பிட்ட பிரதேச நீதிமன்றம் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

காணாமற்போவது தொடர்பாக நாளொன்றுக்கு குறைந்தது இரண்டு முறைப் பாடுகளாவது கிடைக்கின்றன. ஜனவரி முதல் மூன்று வார காலப்பகுதியில் மட்டும் 41 பேர் காணாமற்போயிருப்பது முறைப்பாடுகள் மூலம் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இவற்றைவிட கடத்தல்கள், மிரட்டல்கள், துன்புறுத்தல்கள் போன்ற சம்பவங்கள் தொடர்பாக கடந்த மூன்று வார காலப் பகுதியில் 104 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அச்சுறுத்தல் தொடர்பாக 52 முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன. அவற்றில் 15 முறைப்பாடுகள் படையினருக்கும், பொலிஸாருக்கும் எதிரானவை.

ஜனவரி முதல் வாரத்தில் 39 முறைப்பாடுகளும் இரண்டாவது வாரத்தில் 37 முறைப்பாடுகளும், மூன்றாவது வாரத்தில் 28 முறைப்பாடுகளும் கிடைத்துள்ளன.

இப்படி மனித உரிமைகள் ஆணைக்குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## தெஹிவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர்கள் கைதுசெய்யப்பட்டனர். 25 முதல் 40 வயதுக்கு இடைப்பட்ட இவர்கள் அனைவருமே வடக்குக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள். கைதுசெய்யப்பட்ட அனைவரும் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசேட பொலிஸ் குழுவினரால் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளனர்.


## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



### திருமதி செல்லையா சிவசோதி

மலர்வு 24.06.1947 — உதிர்வு 27.12.2006

எமது குல தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்தும் ஆறுதல் தெரிவித்தும் அனுதாபச் செய்தி அனுப்பியும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் மற்றும் பல வழிகளில் உதவி நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (26.01.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்

566, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(மில்க்வைற் முன் ஒழுங்கை). (57474) - குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 03 . 07 . 1950



ஆண்டவன் அடியில் 05 . 02 . 2006

### அமரர் வீரசிங்கம் பவசிங்

எங்கள் குடும்ப விளக்கு அணைந்தாலும்
எங்கள் நெஞ்சை விட்டகலாது என்றும்
பிரகாசித்துக்கொண்டிருக்கும் எங்கள் தெய்வமே!
உங்கள் ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். - குடும்பத்தினர். (57490)

CHEMISTRY CENTRE
Temple Rd. (Green park
A/L 2009
GENERAL
Tue. Fri 3.30 - 4.30
THERMO
Wed. 3.30 - 4.30
அன்பழகன் B.Sc.

விக்னா கல்வி நிலையம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L DAY CLASS
தமிழ்
திரு. குழந்தை
PAPER CLASS
ஆரம்பம்: 29.01.2007
மு.ப. 10.30
A/L 2009 தமிழ் Sat.,Sun 8 a.m.

Computer Courses
Start On :- 27.01.2007
மேலதிக விபரங்களுக்கு நேரில்
Softview Computer College
55, Arasady Road,
Jaffna. T.P: 021 2225170


## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி கந்தசாமி



ஏழாலை தெற்கைப் (தோப்பு) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி 25.01.2007 அன்று சிவபதமடைந்தார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் உதயகுமார் (கனடா), உதயசாந்தினி, பிரதீபன் (உதயன் பான்ஷி ஹவுஸ்-உரும்பிராய்), பிரபாகரன் (மலேசியா), கிருபாகரன் (டோகா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மாஜனி (கனடா), சசிகுமார், வைதினி ஆகியோரின் மாமனும் கோபிசாந், லுக்ஷாந், லக்ஷிகன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2007) வெள்ளிக்கிழமை மு.ப. 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
(தோப்பு), சுன்னாகம்.
தொ.பே.:0777 265728 (57479)

தகவல்:
க.பிரதீபன் (கண்ணன்).
(மகன், உதயன் பான்ஷி).

### சபாபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை 25.01.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை-பார்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற விக்னேஸ்வரி மற்றும் விக்னேஸ்வரன் (கனடா), சுந்தரேஸ்வரன் (ஜெயகிருஸ்ணா ஹாட்வெயார், சுன்னாகம்), சிவனேஸ்வரன் (சுவிஸ்), லோகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் தந்தையும் சிவானந்தராசா (இ.மி. சபை), விஜயராணி (கனடா), கீதாஜினி, அருட்செல்வி (சுவிஸ்), சிவமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் துஷி(கனடா), காலஞ்சென்ற துவாரகன் மற்றும் துஷ்யந்தி (கனடா), தர்சன், கஜன், அருண் (கனடா), நிதீசன், பானுஜா, சுகேசன், சிவானி (சுவிஸ்), கோபிதன், கோபிகா (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் கஜானனின் (கனடா) பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.01.2007 பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுந்தரேஸ்வரன்.
(ஜெயகிருஸ்ணா ஹாட்வெயார்ஸ்- சுன்னாகம்.)

### திருமதி இராசம்மா சிவசாமி

4ஆம் ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா சிவசாமி 25.01.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் சிவசாமியின் அன்பு மனைவியும் தர்மகுலசிங்கம் (முன்னாள் க.தொ.கூ.ச. ஊழியர்), இராசசிங்கம் (புத்தளம்), விஜயசிங்கம் (புத்தளம்), குணசிங்கம் (ஆஸ்திரேலியா), தனபாலசிங்கம் (ஆஸ்திரேலியா), சிவராஜசிங்கம் (UNDP), ஜெயராஜசிங்கம் (லண்டன்), சுதாமதி (ஆஸ்திரேலியா), ராகுலசிங்கம்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.01.2007) வெள்ளிக்கிழமை ந.ப 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28, 4ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி,
கந்தர்மடம். (57487)

தகவல்:
சி.தர்மகுலசிங்கம், சி.சிவராஜசிங்கம்.
(மகன்மார்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org